தொகுதியைப் பற்றியும் பேசுங்கள் என்றால் எப்படி? உங்கள் தொகுதியைப் பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம்: சின்னசேலம் தொகுதியில் மேல்நாழிபுரம் என்ற கிராமத்தில் ஒரு பி.எச்.சி. அமைக்க வேண்டும். அதற்காகக் கிட்டத்தட்ட 6 ஏக்கர் நிலம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று சின்னசேலத்தில் அப்கிரேடட் பி.எச்.சி. தொடங்க வேண்டும். அதற்கும் 6½ ஏக்கர் நிலம் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே 12 படுக்கைகள் கொண்ட அப்கிரேடட் பி.எச்.சி. அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. கோரிக்கை எண். 2-மாநில ஆயத் தீர்வைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

84. 1994-95-ஆம் ஆண்டின் சாதனைகள் மற்றும் 1995-96-ஆம் ஆண்டின் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

85. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

86. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தி ஐந்தாவது அறிக்கை, 1994-95.

87. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தாறாவது அறிக்கை, 1994-95.